. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936






www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 15.04.2026 • மலர் 04 • இதழ்: 104 • Edition : Nagercoil • 15.04.2026 • Vol : 04 • Issue : 104 • Page : 4 • Rs. 5/-


### தொகுதி வரையறையால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டால்

# மோடிக்கு ஸ்டாலின் இறுதி எச்சரிக்கை

சென்னை, ஏப். 15

"தமிழ்நாட்டை பாதிக்கும்படியோ, வட மாநிலங்களுக்கு அரசியல் வலிமையை கூட்டும்படியோ தொகுதி வரையறை நடந்தால் சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடு தன் எதிர்ப்பை கடுமையாக காட்டும். நீங்கள் இது வரை பார்க்காத தமிழ்நாட்டை பார்க்க வேண்டியிருக்கும்" என முதல்வர் ஸ்டாலின் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்தது அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில், "தேர்தல் பிரசாரத்துக்காக, நிற்காமல் ஓடிக் கொண்டே இருந்தாலும், இந்தக் கடமையை தவிர்க்க முடியாது.

நாளை ஏப்ரல் 16, நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் கூடுகிறது. கூடுகிறது என்று சொல்வதைவிட, தமிழ்நாடு மேற்கு வங்கத் தேர்தலுக்கு இடையில் வலுக்கட்டாயமாகக் கூட்டப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

'Delimitation' என்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக அரசியல் சட்டத் திருத்தத்தை இந்தத் தொடரில் 'புல்டோஸ்' செய்யப் போகிறார்கள். முதலில் இருந்தே இது பற்றி நாம் தொடர்ந்து எச்சரித்தோம். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் இருந்து, இதனால் பாதிப்படையவுள்ள மாநில முதலமைச்சர்களையும் முக்கியக் கட்சித்தலைவர்களையும் சென்னைக்கு அழைத்து, கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் நடத்தினோம்.



"மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துங்கள்; அளவாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைபிடியுங்கள்" என ஒன்றிய அரசு சொன்னதையெல்லாம் நாங்கள் கேட்டோம். சொன்னதை ஒழுங்காகச் செய்ததற்காகவே எங்களுக்குத் தண்டனை தருவீர்களா? "தென்மாநிலங்கள்பாதிப்படையாது" என நாடாளுமன்றத்தில் வைத்துப் பிரதமர் அவர்கள் உத்தரவாதம் தர வேண்டும் என்று கேட்டோம். பதில் இல்லை. இதுக்காகப் பல்வேறு கட்சி எம்.பி.க்கள் பிரதமரை நேரில் சந்தித்து முறையிட நேரம் கேட்டோம். அதுவும் கிடைக்கவில்லை.

இப்படி, நாம் சொன்ன எதையும் அவர்கள் காதில் வாங்காமல், திமுக மட்டுமல்ல; எந்தக் கட்சியோடும் எந்த மாநிலத்தோடும்எந்தஆலோசனையும் நடத்தாமல், அவர்கள் இஷ்டத்துக்கு செய்யப் பார்க்கிறார்கள். நேற்று, மரியாதைக்குரிய அம்மையார் சோனியா காந்தி அவர்களும், நாம் கேட்கும் அதே கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்! பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் உள்ளிட்ட யாருக்குமே பதில் இல்லை!

இப்படி அவசரக அவசரமாக 'Delimitation' செய்ய நினைப்பது, பாஜக அரசின் அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல்! இன்னும் சொன்னால், மாநில உரிமைகளைப் படுகொலை செய்திருக்கிறார்கள். இந்த 'Delimitation'ஐ எப்படி செய்ய போகிறார்கள் என்று தெரியவில்லை. அந்தச் சட்டத் திருத்தம் என்ன என்பது பற்றி, இது வரை எந்த விளக்கத்தையும் கொடுக்காமல் இருக்கிறார்கள்.

இவர்கள் இப்படி மறைத்து மறைத்துச் செய்கிறார்கள் என்றால், கண்டிப்பாக ஏதோ பெரிய ஆபத்து இருக்கிறது என்று, அனைவருக்குமே அந்தச் சந்தேகம் வலுவடைகிறது. தென்மாநில மக்கள் பெரும் அச்சத்தில் இருக்கிறார்கள். நான் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் , பிரதமர் மோடிக்கும், இந்த நேரத்தில் முக்கியமாக ஒன்று சொல்லிக் கொள்கிறேன்.

நடக்க இருக்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில், எங்கள் எம்.பி.க்கள் கலந்து கொள்வார்கள். தமிழ்நாட்டை பாதிப்பது போன்றோ, வடமாநிலங்களுக்கு அரசியல் வலிமையை மேலும் வாரி வழங்குவது போன்றோ, ஏதாவது நடந்தால், தமிழ்நாட்டில் இருக்கும் நாங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடே ஸ்தம்பிக்கும். தமிழ்நாடு தனது எதிர்ப்பைக் கடுமையாகக் காட்டும். ஒவ்வொரு குடும்பமும் தெருவில் வந்து உட்காருவோம். தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கும் என்னுடைய தலைமையிலேயேமிகப்பெரிய போராட்டம் நடத்துவோம்.

"இது தேர்தல் காலம் தானே!" "இவர்கள் கவனம் அதில்தான் இருக்கும்!" "நாம் டெல்லியில் சைலண்டாகத் தமிழ்நாட்டின் தொகுதி மறுவரையறை செய்து விடலாம்" என்று மட்டும் நினைக்கவே நினைக்காதீர்கள்.

சொல்லும் நான் தமிழ்நாட்டு முதலமைச்சர் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தின் தலைவர். நீங்கள் இதுவரை பார்க்காத தமிழ்நாட்டைப் பார்க்க வேண்டியிருக்கும். 50கள், 60களில் பார்த்த பழைய திமுகவை இந்தியா மீண்டும் பார்க்க வேண்டியிருக்கும்.

"என்ன இவன் மிரட்டுகிறான்?" என்று நினைக்காதீர்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் அதை மிரட்டல் என்று நினைத்தாலும் எங்களுக்குக் கவலையில்லை. ஆம், தமிழ்நாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும் எச்சரிக்கை இது. தேர்தல், ஆட்சி அதிகாரம் இது எல்லாம் எங்களுக்கு இரண்டாம் பட்சம்தான்.நாங்கள் சுயமரியாதைக்காரர்கள்! எங்களுக்குக் கொள்கைதான் முக்கியம்! மாநில உரிமைகள்தான் முக்கியம். அதுதான், அண்ணாவும் கலைஞரும் எங்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்ற உயிர்க் கொள்கை.

தமிழ்நாட்டுக்குத் தவறிழைத்துவிட்டு, வழக்கம்போல் சும்மா கடந்து செல்ல நினைத்தால், நடப்பதே வேறு!. சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளில், அவர் மேல் ஆணையாகச் சொல்கிறேன். தமிழ்நாடு பாதிக்கப்பட்டால், இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துவிடுவோம்.பிரதமர்மோடியே மீண்டும் சொல்கிறேன்... இது தமிழ்நாட்டில் இருந்து உங்களை நோக்கி விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை" என தெரிவித்துள்ளார்.

## பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை: அதிமுக, திமுக ஆட்சியை ஒப்பிட்டு பி.ஆர்.பாண்டியன் குற்றச்சாட்டு

நாகப்பட்டினம், ஏப். 15

தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தின் நாகை மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் அவசரக் கூட்டம் மாவட்டத்தலைவர்புலியூர்பாலசுப்ரமணியன்தலைமையில் நாகையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற பி.ஆர்.பாண்டியன், பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: நாகை மாவட்டத்தில் 2024ல் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பேரிடர் மேலாண்மை நிதி மூலம் இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை.

கருணாநிதி பிறந்த திருக்குவளையில் விவசாயிகள் தற்கொலைகள் தொடர்கிறது. நெல் உரிய காலத்தில் கொள்முதல் செய்யப்படவில்லை. 2021 திமுக தேர்தல் அறிக்கையில் கூறியபடி, ஒன்றியம்தோறும் மூடப்பட்ட கிடங்குகள்அமைக்காததால், நெல்மணிகள் வீணாகின்றன.

கூட்டுறவு வங்கிகளில் கடன் தர மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று கூறுவதும், நெல்லுக்கு ஊக்கத் தொகை தரக்கூடாது என்று மத்திய அரசு உத்தரவு என சொல்வதும் உண்மைக்கு மாறானது.

கடன் தள்ளுபடி, ஊக்க நிதி போன்றவற்றை மாநில அரசு தனது சொந்த நிதியில் இருந்து ஈடு செய்கிறது. இதை மத்திய அரசு கட்டுப்படுத்த முடியாது. விவசாயிகளுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையைக் கூட பெற்றுத்தர திமுக அரசு முன்வருவதில்லை.

20172021 வரையிலான அதிமுக ஆட்சியில், விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு இழப்பீடாக ரூ.13 ஆயிரம் கோடி பெற்றுத் தரப்பட்டது. ஆனால், திமுக ஆட்சி காலத்தில் கடந்த 5 ஆண்டுகளில் வெறும் ரூ.3 ஆயிரம் கோடி மட்டுமே இழப்பீடாக பெற்றுக் கொடுத்துள்ளனர்.

தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மூலம் காப்பீடு செய்வதற்கு திமுக அரசு அனுமதி மறுக்கிறது. தனியார் காப்பீட்டு நிறுவனங்களை அனுமதிக்க விரும்புகிறது.

விவசாயிகளுக்கு விரோதமான சட்டங்களை திட்டங்களாக நிறைவேற்ற திமுக அரசு முற்படுவதால் திமுகவுக்கு எதிராக வாக்களிப்பது என விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வேதை கருணைநாதன், நாகை ஒன்றிய தலைவர் வேலாயுதம், திருமருகல் ஒன்றிய செயலாளர் பரமசிவம், தலைவர்மகேஷ்குமார்உள்ளிட்டோர்பங்கேற்றனர்.









## தமிழகத்தில் திமுகவின் ஒத்துழையாமையிலும் மோடி அரசு தமிழ்நாட்டிற்கு அனைத்து வகையிலும் ஆதரவளிக்கிறது: மத்திய அமைச்சர் பிரஹ்லாத் ஜோஷி பேட்டி

மார்த்தாண்டம், ஏப்.15

விளவங்கோடு சட்டமன்ற தொகுதி பாஜக வேட்பாளர் விஜயதரணி ஆதரவாகவும், இன்று பிரதமர் நரேந்திர மோடி நாகர்கோவிலில் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு கேட்டு பிரமாண்ட ரோட் ஷோ நடத்த உள்ள நிலையில் குமரி மாவட்டத்தில் வந்துள்ள மத்திய அமைச்சர் பிரஹ்லாத் ஜோஷி குழித்துறையில் பாஜக மாவட்ட அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளைசந்தித்து பேட்டியளித்தார். அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

நாகர்கோவிலில் நடைபெறவுள்ள ஏற்பாடுகளை நான் கவனித்ததில், இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாலைப் பேரணியாகவும், தமிழ்நாட்டின் இந்தப் பகுதியின் வரலாற்றிலேயே மிகப்பெரிய சாலைப் பேரணியாகவும் அமையும் என்று தெரிகிறது.



மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் இருப்பதால் பிரதமர் நரேந்திர மோடியின் செல்வாக்கு இன்னும் உச்சத்தில் உள்ளது. அவர் நாட்டை நிர்வகிக்கும் விதத்தையும், ஊழல் குடும்பம் ஆளும் இந்த திமுக அரசின் ஒத்துழையாமைக்கு மத்தியிலும் மாண்புமிகு பிரதமருக்குஅவர் ஆதரவளித்தவிதத்தையும் நான் கூறுகிறேன்.

ஊழல் குடும்பம் ஆளும் திமுகவின் ஒத்துழையாமையிலும் நரேந்திர மோடி தமிழ்நாட்டிற்கு அனைத்து வகையிலும் ஆதரவளித்துள்ளார். அது உள்கட்டமைப்பாக இருந்தாலும் சரி, நிதியுதவியாக இருந்தாலும் சரி, மோடி அரசின் ஆட்சிக்காலத்தில் மானியஉதவி45மடங்குக்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட மானிய உதவி 60 முதல் 62 ஆயிரம் கோடியாக இருந்தது.

இன்று அது கிட்டத்தட்ட 3 லட்சம் கோடியாகஉள்ளது. மேலும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி உட்பட முழு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், தமிழ்நாட்டில் ரயில்வே மேம்பாட்டிற்காக அவர்களுக்கு 700, 800 கோடிகள் கிடைத்து வந்தன. மோடி ஆட்சிக் காலத்தில், நாங்கள் சராசரியாக 8,000 முதல் 9,000 கோடிகள் வரை கொடுத்துள்ளோம்.

அதனால்தான் தமிழ்நாட்டில் மின்மயமாக்கல் கிட்டத்தட்ட 100% ஆக உள்ளது. மேலும், இந்த மக்கள் குடும்ப ஆட்சி, தங்களின் சுயநலம் மற்றும் ஊழல் ஆகியவற்றில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருப்பதால், தமிழ்நாடு எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை இழந்துள்ளது.

மக்களின் நலன் எப்படி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ, அது இந்தக் குடும்பம் தலைமையிலான அரசாங்கத்தால் நடக்கவில்லை. அவர்கள் தங்களைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறார்கள். அவர்களுடைய மகன்கள், மகள்கள், சகோதரிகள் மட்டுமே முன்னேறுகிறார்கள். தமிழ்நாட்டில்சூரியன் உதிக்கவில்லை. அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே முன்னேறுகிறார்கள். இதுதான் நிலைமை. இன்று நான், முன்னாள்சட்டமன்றஉறுப்பினர் விஜயதரணி போட்டியிடும் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்கு வந்திருக்கிறேன். அவரும் என்னிடம் தொலைபேசியில் பேசினார். நான் இதற்காக இங்கு வந்திருக்கிறேன்.

இம்முறை, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழக இபிஎஸ் தலைமையில், அதிமுகவின் கீழ் என்டிஏ ஆட்சி அமையும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன். என கூறினார்.

# அதிமுகவிற்கு டெபாசிட் கூட கிடைக்காது தூத்துக்குடியில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு




தூத்துக்குடி, ஏப். 15

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி பிறந்த மண்ணில், டெல்லிக்கு அடிபணிந்து கப்பம் கட்டும் அதிமுக இந்தத் தேர்தலில் டெபாசிட் கூட வாங்கக்கூடாது என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தூத்துக்குடியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசினார்.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 6 தொகுதி வேட்பாளர்களையும் ஆதரித்துச் சங்கரப்பேரி விலக்கு பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் முதல்வர் பேசியதாவது: மத்திய அரசு ஒரு ரூபாய் கூட வழங்காத நிலையில், தமிழக அரசு ரூ.666 கோடி நிதியுதவி வழங்கியது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா ரூ.6,000 வழங்கப்பட்டது.

தூத்துக்குடியில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டு 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ரூ.30,000 கோடி மதிப்பில் கப்பல் கட்டும் தளம், விண்வெளிப் பூங்கா மற்றும் புதிய சிப்காட் பணிகள் நடைபெற்று வருகின்றன. உடன்குடி அனல் மின் நிலையம், விமான நிலைய விரிவாக்கம், திருச்செந்தூர் கோவில் புனரமைப்பு மற்றும் கி.ரா., வீரமாமுனிவர் மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டதை அவர் பட்டியலிட்டார்.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டதை டிவியில் பார்த்துத் தெரிந்துகொண்டேன் என்று பொய் சொன்னவர் எடப்பாடி பழனிசாமி. அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையில் அவரது பொய்கள் அம்பலமாகிவிட்டன. சாத்தான்குளம் தந்தைமகன் மரணத்தை மூடிமறைக்கப் பார்த்தவர் அவர். காலில் விழுவதும், காலை வாரிவிடுவதுமே அவரது அரசியல் வாழ்க்கை" என முதல்வர் கடுமையாகச் சாடினார்.

மத்திய பாஜக அரசுக்குத் தமிழ், தமிழ்நாடு மற்றும் தமிழ் கலாசாரம் என்றால் வெறுப்பு என முதல்வர் குறிப்பிட்டார். மத்திய அரசுடன் சமரசம் செய்து கொண்டு 4 ஆண்டுகள் ஆட்சி நடத்திய எடப்பாடி பழனிசாமியால் நீட் விலக்கைப் பெற முடிந்ததா? அல்லது தமிழகத்திற்கு நிதி தான் வாங்க முடிந்ததா?" எனக் கேள்வி எழுப்பினார்.

எங்களது தேர்தல் அறிக்கையே இந்தத் தேர்தலின் 'சூப்பர்ஸ்டார்'. குறிப்பாக, இல்லத்தரசிகளுக்கு வீட்டு உபயோகப் பொருட்களை வாங்க ரூ.8,000 மதிப்பிலான கூப்பன் வழங்கும் திட்டம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இது திராவிட மாடல் 2.0 ஆட்சிக்கான தொடக்கம்" என்றார். இந்தக்கூட்டத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன், வேட்பாளர்கள் விளாத்திகுளம் மார்க்கண்டேயன், திருவைகுண்டம் ஊர்வசி அமிர்தராஜ், ஓட்டப்பிடாரம் ராம்ஜெயம், கோவில்பட்டி கருணாநிதி மற்றும் கூட்டணிகட்சிநிர்வாகிகள் கலந்துகொண்டனர். பிரசாரத்தை முடித்த முதல்வர், தூத்துக்குடி விமான நிலையத்திலிருந்து தனி விமானம் மூலம் சென்னை திரும்பினார்.

பிரச்சாரக் கூட்டத்தில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் சண்முகம், தமிழக ஆட்சி கழக நிறுவனர் எஸ்ஆர் பாண்டியன், காங்கிரஸ் மாவட்ட தலைவர் சகாயராஜ், மதிமுக மாவட்ட செயலாளர் ரமேஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கரும்பன், மாநகர செயலாளர் தனலட்சுமி, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஆறுமுகம், மாநகர செயலாளர் முத்து விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் விமல்வங்காளியார், இந்திய யூனியன் முஸ்லீம்லீக் மாவட்ட தலைவர் மீராசா, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் முகமதுஅசன், மூக்குலத்தோர் புலிப்படை மாவட்ட செயலாளர் மணி, தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், எஸ்டிபிஐ மாவட்ட செயலாளர் மைதீன்கனி உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரியில்

# சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் 134வது பிறந்த நாள் பி.டி.செல்வகுமார் மாலை அணிவித்து மரியாதை



நாகர்கோவில், ஏப்.15

டாக்டர் அம்பேத்கர் 134வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு கலப்பை மக்கள் இயக்க நிறுவுன தலைவர் பி.டி. செல்வகுமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் அடுத்த லெட்சுமிபுரத்தில் அம்பேத்கர் 134வது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் அப்பகுதி அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கலப்பை மக்கள் இயக்க நிறுவன தலைவர் பி.டி. செல்வகுமார் அம்பேத்கர் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அப்பகுதி இளைஞர்களிடம் கன்னியாகுமரி தொகுதி அதிமுக வேட்பாளர் தளவாய் சுந்தரத்தை ஆதரித்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

## சிஎஸ்ஐ சர்ச்சில் சிறுபான்மை மக்களிடம் கை சின்னத்திற்கு

# வாக்களிக்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த துரை தீவிர வாக்கு சேகரிப்பு



கிருஷ்ணகிரி ஏப் 15

முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் துரை என்கின்ற துரைசாமி தலைமையில் கிருஷ்ணகிரி சட்டமன்ற வேட்பாளர் செல்லகுமாரை ஆதரித்து துண்டு பிரசுரங்களை வழங்கி, கிருஷ்ணகிரி நகரின் பல்வேறு பகுதிகளில் கைசின்னத்திற்க்கு வாக்கு சேகரித்தனர். இதில் மாநில அரசின் சாதனைகளை விளக்கியும், திமுகவின் தேர்தல் அறிக்கையும் விளக்கி கிருஷ்ணகிரி நகர பொதுமக்களிடமும், சிறுபான்மை மக்களிடமும், சிஎஸ்ஐ சர்ச் பாதிரியாரிடமும், துண்டு பிரசுரங்களை வழங்கி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் கூட்டணி கட்சியை சேர்ந்த திமுக மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் ராஜசேகர், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ஜான் டேவிட், மாவட்ட துணை தலைவர் காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்டத் துணைத் தலைவர் முஸ்தாக் அகமது, நெசவாளர் அணி துணை அமைப்பாளர் திருமலை, சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் ஜெயராஜ், வினோத், சேகர், பிரதீப், உள்ளிட்டா ஏராளமான கலந்து கொண்டனர்.

## சிஎஸ்ஐ சர்ச் சேர்ந்த சிறுபான்மை மக்களிடம்

# கை சின்னத்திற்கு வாக்களிக்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த துரை தீவிர வாக்கு சேகரிப்பு



கிருஷ்ணகிரி ஏப் 15

முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் துரை என்கின்ற துரைசாமி தலைமையில் கிருஷ்ணகிரி சட்டமன்ற வேட்பாளர் செல்லகுமாரை ஆதரித்து துண்டு பிரசுரங்களை கிருஷ்ணகிரி நகரின் பல்வேறு பகுதிகளில் கை சின்னத்தில் வாக்கு சேகரித்தனர். இதில் மாநில அரசின் சாதனைகளை விளக்கியும், எதிர்வரும் காலங்களில், திமுகவின் தேர்தல் அறிக்கையும் விளக்கி கிருஷ்ணகிரி நகர வியாபாரிகளிடமும் பொது மக்களிடமும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த வாக்கு சேகரிப்பில் நிகழ்ச்சியில் கூட்டணி கட்சியை சேர்ந்த திமுக மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் ராஜசேகர், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ஜான் டேவிட், மாவட்ட துணை தலைவர் காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்டத் துணைத் தலைவர் முஸ்தாக் அகமது, நெசவாளர் அணி துணை அமைப்பாளர் திருமலை, சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் ஜெயராஜ், வினோத், சேகர், பிரதீப், உள்ளிட்டா ஏராளமான கலந்து கொண்டனர்.

## பர்கூர் சட்டமன்றத் தொகுதியில்

# பர்கூர் மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வேட்பாளர் தே.மதியழகன் ஓட்டு சேகரிப்பு



கிருஷ்ணகிரி, ஏப். 15

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட கந்திகுப்பம், காரக்குப்பம், ஒப்பந்தவாடி, மல்லப்பாடி, கொண்டப்பநாயனப்பள்ளி உள்ள ஊராட்சிகளில் உள்ள கிராமங்களில் வீடு வீடாக சென்று திமுக வேட்பாளர் மதியழகன் தீவிர ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது தமிழக முதலமைச்சரின் ஐந்து ஆண்டு காலம் நிறைவேற்றப்பட்ட சாதனைகளையும் தேர்தல் வாக்குறுதிகளான பெண்களுக்கான ரூபாய் 8.ஆயிரம் மதிப்பீட்டில் கூப்பன், மகளிர் உருவித்தொகை 1000 ரூபாயில் இருந்து 2000 ரூபாய் வழங்கப்படும் உள்ளிட்ட ஏராளமான வாக்குறுதிகளை எடுத்துரைத்தார். மேலும் பர்கூர் தொகுதி வளர்ச்சிக்கு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி உள்ளேன் என தெரிவித்தார். முன்னதாக வேட்பாளர் தே. மதியழகனுக்கு வழிநெடுகிளும் பட்டாசு வெடித்து மேல தாலத்துடன் மலர் தூவி வரவேற்பு அளித்தனர். இந்த நிகழ்ச்சியில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் காந்தி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

# திருச்சி பட்டாக்கத்தியில் கேக் வெட்டிய இளைஞர் கைது




திருச்சி, ஏப்.15

மணப்பாறை அருகே வளநாடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பட்டாக்கத்தி வைத்து பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடிய இளைஞர்கள், பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாக பட்டாக்கத்தியுடன் ரீல்ஸ் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர். இதனைத் தொடர்ந்து திருச்சி மாவட்ட எஸ்பி செல்வநாகரத்தினம் உத்தரவின் பேரில் வளநாடு போலீசார் அவர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இது போன்ற செயல்களில் ஈடுபட மாட்டோம் என வருத்தம் தெரிவித்த வீடியோவை போலீசார் வெளியிட்டனர்




சட்ட மாமேதை பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளையொட்டி காட்பாடி குடியாத்தம் சாலை சந்திப்பில் உள்ள அவரது சிலைக்கு விசிக மாவட்ட செயலாளர்வேலூர்பிலிப்மாலைஅணிவித்துவீரவணக்கம் செலுத்தினார். இதில் மாவட்ட துணை செயலாளர்கள் பிரேம்குமார், ஜீவா, பகுதி செயலாளர் ராஜ்குமார், செயற்குழு உறுப்பினர் முனுசாமி, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை நிர்வாகி தினகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அனைவரும் வாக்களித்து ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும்

## வணிகர் சங்க பேரமைப்பு விழிப்புணர்வு பிரசாரம்



ஈரோடு, ஏப்.15

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் ஈரோடு கனி மார்க்கெட்டில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் மஞ்சள் துணிப் பை கொடுத்து அனைவரும் வாக்களித்து ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும் என்று விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டது. இதன் பிறகு பேரமைப்பின் தலைவர் விக்கிரமராஜா கூறியதாவது: ஈரோடு பகுதியில் பெரும் பிரச்சினையாக உள்ள சாயக்கழிவு வெளியேறுவதை தடுக்க பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும். தேர்தல் பறக்கும் படையினரின் சோதனை வணிகம் மற்றும் வணிகர்களை பாதிக்காமல் தொடர வேண்டும். தமிழக பட்ஜெட்டில் ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்குவதுபோல், வணிகர் நலவாரியத்துக்கும் நிதி ஒதுக்க வேண்டும். ஜி.எஸ்.டி., உணவு பாது காப்பு மற்றும் தொழிலாளர்கள் சட்டங்களை எளிமை படுத்த வேண்டும். அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் போரால் ஆயிரக்கணக்கான ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன. இந்த போர் குறித்த பேச்சு வார்த்தையை பாகிஸ்தான் பேசுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் எடுக்க வேண்டும். பெட்ரோல், டீசல், கியாஸ் தட்டுப்பாடின்றி மற்றும் விலை உயர்வால் வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கட்சியினரும் போட்டிபோட்டு இலவசங்களை அள்ளி இறைக்கிறார்கள். இதனால் பொருளாதாரத்தை எப்படி சீர்செய்ய போகிறோம் என்று தெரியவில்லை. இலவசங்களை வாக்காளர்கள் விரும்பக்கூடாது. அதற்கு மாறாக தரமான சாலை, உள் கட்டமைப்பு, ஏரி, குளம், வாய்க்காலை தூர்வாரும்படி கேட்கவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். இதில் மாவட்ட நிர்வாகிகள் சண்முகவேல், உதயம் பி.செல்வம், லாரன்ஸ் ரமேஷ் மற்றும் நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## தென்காசி தொகுதி

# திமுக வேட்பாளர் கலைகதிரவன் பனை ஓலை பெட்டி தொழிலாளர்களிடம் கலந்துரையாடி வாக்கு சேகரித்தார்



தென்காசி ஏப்ரல் 15

தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மருத்துவர் கலைகதிரவன் பனை ஓலை பெட்டி தயாரிக்கும் தொழிலாளர்களிடம் கலந்துரையாடி வாக்கு சேகரித்தார். தென்காசி தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் கலைகதிரவன் கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம், தென்காசி கிழக்கு ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம் பேரூர் ஆகிய பகுதிகளில் வீதி, வீதியாக சென்று தீவிர வாக்குச்சேகரிப்பில் ஈடுபட்டார். வீடு, வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார். சென்ற இடங்களில் எல்லாம் பொதுமக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.

வன்னியசுந்தரபுரத்தில் பனை ஓலை பெட்டி செய்யும் தொழிலாளர்களிடம் கலந்துரையாடி அவர்களின் குறைகளை கேட்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசானது தொழிலாளர் நலனுக்காகவும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி தொழிலாளர் நலன் காக்கும் அரசாக விளங்கி வருகிறது. முதல்வரின் கரத்தினை வலுப்படுத்திட நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றி பெற செய்ய வேண்டுகிறேன். உங்களின் கோரிக்கைகள் அனைத்தும் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றித் தருவேன் இவ்வாறு அவர் பேசினார் இந்நிகழ்ச்சிகளில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட செயலாளர் வக்கீல் பொ. சிவபத்மநாதன், ராணிஸ்ரீகுமார் எம்.பி, ஒன்றிய பொறுப்பாளர் ரமேஷ், வட்டார காங்கிரஸ் தலைவர் குமார்பாண்டியன், மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ், ஊராட்சி தலைவர் ராஜ்குமார் மற்றும் திமுக, காங்கிரஸ், மதிமுக, தேமுதிக, விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட், தமிழ்புலிகள் கட்சி மற்றும் கூட்டணிகட்சிநிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்

## அரசூர் கிராமத்தில்

# அதிமுக வேட்பாளர் குமரகுரு இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்



திருவெண்ணெய்நல்லூர், ஏப்.15

திருவெண்ணெய்நல்லூர் அதிமுக வடக்கு ஒன்றியம் அரசூர் கிராமத்தில் ஒன்றிய செயலாளர் ஏகாம்பரம் தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் இரா.குமரகுரு இரட்டை இலை சின்னத்திற்கு வீடு வீடாக சென்று தீவிர வாக்கு சேகரித்தார் அப்போது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி நிர்வாகிகள் மேளதாளங்கள் முழங்க பட்டாசு வெடித்து ஆளுயர ரோஜா பூ மாலை அணிவித்து பெண்கள் மலர் தூவி ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர் இதில் மாவட்ட மாணவரணி செயலாளர் பாக்யராஜ் கிளை செயலாளர் அன்பழகன் பிரதிநிதி சேகர் மாவட்ட மாணவரணி துணை செயலாளர் பிரதீப் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மேகநாதன் ஒன்றிய மாணவரணி செயலாளர் சின்னசாமி மற்றும் அஜித் செந்தமிழ் தில்சன் ஏழுமலை தணிகன் விஜயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு வரவேற்றனர்

### தருமபுரி சட்டமன்ற தொகுதி

# தேமுதிக வேட்பாளர் இளங்கோவன் தீவிர வாக்கு சேகரிப்பு



தருமபுரி ஏப்ரல் 15
தருமபுரி சட்டமன்ற தொகுதியில் மாதசார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் தேமுதிக வேட்பாளர் டாக்டர் இளங்கோவன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் தர்மபுரி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட நியூ காலனி, பிடமனேரி, ஆட்டுக்காரன்பட்டி மற்றும் 10 க்கும் மேற்பட்ட இடங்களில் முரசு சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தர். அப்போது அப்பகுதி மக்கள் ஆரத்தி எடுத்தும் , மாலை அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அவர் கூறியதாவது திமுக அரசு அமைந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை ஆயிரத்திலிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இல்லத்தரசிகளுக்கான 8,000 மதிப்புள்ள டோக்கன் வழங்கப்படும். பொது மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தருவேன். சிப்காட் பணிகளை விரைந்து முடித்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகிடைக்க நடவடிக்கை எடுப்பேன். விவசாயிகளுக்கு மீட்டர் இல்லாத இணைப்புகளை வழங்குவேன். ஏரி குளங்களுக்கு நீர் நிரப்ப நடவடிக்கை எடுப்பேன் என்றார். தேமுதிக மாவட்ட செயலாளர் குமார், நகர செயலாளர் சுரேஷ், ஒன்றிய செயலாளர் விக்னேஷ் குமார், மாவட்ட பொருளாளர் சீனிவாசன், பிரகாஷ், செந்தாமரைக்கண்ணன், ராஜேஷ்கண்ணன், மஞ்சுநாதன், விக்னேஷ், நாரேந்திரன், திமுக தருமபுரி மேற்கு ஒன்றிய செயலாளர் டி.எல். காவேரி தலைமை கழக பேச்சாளர் டி. ஏ. ரவி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### வில்லிவாக்கம்

# திமுக வேட்பாளர் கார்த்திக் மோகனுக்கு மகளிர் அமோக வரவேற்பு



சென்னை ஏப்ரல் 15,
வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கார்த்திக்மோகன் 95வது வட்டம் பஜனை கோயில் தெருவில் வாக்குகள் சேகரித்தார். இந்நிகழ்வின் போது 95 வட்ட துணைச்செயலாளர் தில்லைவாணி அவர்களின் தலைமையில் 150க்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டு மலர்த்துவி, மாலை அணிவித்தும் கிரீடம் சூட்டியும் வரவேற்பு அளித்து வாழ்த்து தெரிவித்தனர்.

### திருவெண்ணெய்நல்லூர் அருகே

# துலங்கம்பட்டு கிராமத்தில் திமுக வேட்பாளர் வசந்தவேலுக்கு இளைஞரணி சார்பில் உற்சாக வரவேற்பு



திருவெண்ணெய்நல்லூர் , ஏப்.15
கள்ளக்குறிச்சி திமுக வடக்கு மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியம் துலங்கம்பட்டு கிராமத்தில் ஒன்றிய செயலாளர் சந்திரசேகரன் தலைமையில் கிளை இளைஞரணி அமைப்பாளர் குரு ஏற்பாட்டில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் ஜி. ஆர். வசந்தவேல் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார் அப்போது மேளதாளங்கள் முழங்க பட்டாசு வெடித்து ஆளுயர ரோஜா பூ மாலை அணிவித்து பெண்கள் மலர் தூவி ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர் இதில் ஏராளமான திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வரவேற்றனர்



தமிழ்நாடுசட்டமன்றதேர்தல்2026முன்னிட்டு,52.பர்கூர்சட்டமன்றதொகுதிக்குட்பட்ட, கந்திகுப்பம் ஊராட்சி, காமராஜ் நகரில் வசிக்கும் 100 வயது முதாட்டி திருமதி.சின்னம்மாள் அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் வீட்டிலிருந்தபடியே தபால் வாக்கு செலுத்திய வாக்காளருக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன், பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் .அபிநயா, வட்டாட்சியர் .சின்னசாமி, துணை வட்டாட்சியர் தேர்தல்.அம்மு உள்ளிட்ட பலர் உள்ளனர்.



### விளாத்திகுளத்தில்

# தமிழ் புத்தாண்டை முன்னிட்டு பொன் ஏர் திருவிழா விவசாய பாரம்பரியத்தை போற்றிய விழா

விளாத்திகுளம் ஏப் 15
தமிழ் வருடப்பிறப்பு சித்திரை 1ஆம் நாளை முன்னிட்டு, விளாத்தி குளத்தில் அனைத்து ஏர் உழவன் விவசாயிகள் சங்கம் சார்பில் பாரம்பரிய சிறப்பை எடுத்துரைக்கும் வகையில் பொன் ஏர் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.விவசாயம் தமிழர் வாழ்க்கையின் முதுகெலும்பு என்பதை வலியுறுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழா, இம்முறையும் விவசாயிகளின் உற்சாக பங்கேற்புடன் நடைபெற்றது . விழாவையொட்டி ஏர் (காளை ஏர்) உழவு கருவிகள் அழகாக அலங்கரிக்கப்பட்டு அணிவகுப்பாக கொண்டு வரப்பட்டன. விவசாயிகள் பாரம்பரிய உடை அணிந்து, மண்ணுக்கும் உழவுக்கும் மரியாதை செலுத்தும் விதமாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில்ஏர்உழவன்அனைத்து விவசாயிகள் சங்கத் தலைவர் இராஜேஷ் உழவர், தெற்கு மண்டல அமைப்பாளர் கார்மேகம், விளாத்தி குளம் ஒன்றிய தலைவர் காளிமுத்து ராஜ், கமலாபுரம் பொன்னுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் பூமி, தங்கராசு, விளாத்திகுளம் காளி, கௌதம், குட்டி, சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தென்காசி வடக்கு மாவட்ட

# அதிமுக அலுவலகத்தில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா



தென்காசி ஏப்ரல் 15
சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் 135 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டம் செங்கோட்டை அதிமுக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணல் அம்பேத்கரின் திருவுருவ படத்திற்கு தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினரும் தற்போதைய வேட்பாளருமான செ. கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் கழக செய்தி தொடர்பாளர் அதி வீரராமபாண்டியன், கழக அண்ணா தொழிற்சங்க பேரவை துணை செயலாளர் கந்தசாமி பாண்டியன் மாவட்ட கழக துணை செயலாளர்பொய்கைசோ .மாரியப்பன், மாவட்ட மகளிரணி செயலாளர் சத்யா, நகர கழக செயலாளர்கள் கணேசன், எம் கே முருகன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் ஞானராஜ், இடைகால் செல்லப்பா, மற்றும் செங்கோட்டை நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விளாத்திகுளம் மற்றும் புதூரில் கனிமொழி எம்பி தேர்தல் பிரச்சாரம்



விளாத்திகுளம் ஏப் 15
தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் மற்றும் புதூரில் திமுக வேட்பாளர் மார்கண்டேயனை ஆதரித்து கனிமொழி எம்பி தேர்தல் பிரச்சாரம் செய்தார். அவர் பேசுகையில் மகளிர் உரிமை தொகையாக ரூ. 1000 வழங்கப்படும் என்று முதல்வர் மு .க ஸ்டாலின் கூறிய போது எடப்பாடி பழனிச்சாமி அதை கொடுக்க முடியாது என்று சொன்னார்,

அப்படி சொன்ன எடப்பாடி பழனிச்சாமிக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் வகையில் நம்முடைய முதல்வர் மு க ஸ்டாலின் ரூபாய் ஆயிரம் உரிமைத் தொகையை தந்து , அடுத்த ஆட்சியில் ரூபாய் இரண்டாயிரம் ஆக வழங்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார், கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டம் மூலமாக மாதம் தோறும் ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது, திமுக ஆட்சிக்கு வந்தவுடன் அது ரூபாய். 1500 யாக உயர்த்தப்பட்டது,

படித்துவிட்டு வேலை தேடும் இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு பயிற்சிகள் வழங்கும் காலத்தில் ஒவ்வொரு மாதமும் ரூபாய் 1500 வழங்கப்படும், லேப்டாப் திட்டத்தை நிறுத்தியது எடப்பாடி பழனிச்சாமி, அடுத்து ஐந்து ஆண்டுகளில் 35 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு லேப்டாப் வழங்கப்படும், மகளிர் சுய உதவிக் குழுவினர் தொழில் தொடங்க ரூபாய் 5 லட்சம் மானியத்துடன் கடன் வழங்கப்படும், மத்தியில் காங்கிரஸ் திமுக கூட்டணி ஆட்சியில் இருந்தபோது கொண்டுவரப்பட்டது 100 நாள் வேலை திட்டம் இன்றைக்கு யாருக்காவது 100 நாள் வேலை கிடைக்கிறதா? ஊதியம் ஏறுகிறதா. அது இல்ல ஏனெனில் பிரதமர் மோடி அதை நிறுத்திவிட்டார்.

அந்த திட்டத்தகற்கு கொடுக்க வேண்டிய நிதியை நிறுத்தியுள்ளனர், 100 நாள் வேலைவாய்ப்பில் பணி வழங்குவது குறித்து டெல்லியில் இருந்து முடிவு செய்வார்களாம்,அப்படி என்றால் யாருக்கும் வேலை கிடைக்காத நிலை வந்து விடும்,அதை எதிர்த்துப் போராடி நியாயம்பெற்றுத் தரக்கூடிய ஒரே முதல்வர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தான். பாஜக மோடி எதை சொன்னாலும் எடப்பாடி பழனிச்சாமி வாயை திறக்க மாட்டார். கையைக் கட்டிக் கொண்டு நிற்பார். தமிழகத்திற்கு நிதி வர வேண்டும் என்றால். தமிழகத்திற்காக போராடி உரிமைகளை பெற வேண்டும் என்றால் உங்களுக்காக போராடக்கூடிய தமிழ் நாட்டு பிள்ளைகளுக்கு. தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழ் மொழிக்கு போராடக்கூடிய ஒரே இயக்கம் திமுக தான் என்றார்.



சட்ட மாமேதை பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளையொட்டி காட்பாடி விருதம்பட்டில் உள்ள இந்தியன் புத்திஸ்ட் கவுன்சில் அலுவலகத்தில் மாநில தலைவர் வி.இ.பாண்டியன் தலைமையில் படம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் சுமார் 200பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் வேலூர் மாவட்டம் அரசு ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் கருணாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர்(ஓய்வு) ஆப்பிள் பத்மநாபன், செயலாளர் பாண்டியன், பௌத்த நெறியாளர் முனிவேல், மாநகராட்சி ஆணையர்(ஓய்வு) லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி நகர திமுக சார்பில்

# டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா



தருமபுரி ஏப்ரல் 15
தருமபுரி நகர திமுக சார்பில் டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி அருகில் உள்ள அவரது திரு உருவ சிலைக்குநகரசெயலாளர்நாட்டான்மாதுதலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதில் நகர துணைச் செயலாளர் வ. முல்லைவேந்தன், கழக தலைமை பேச்சாளர் டி. ஏ. ரவி, கலை இலக்கிய அணி மாவட்ட தலைவர் டி. எ. குமார், ரேணுகாதேவி, ஏ. மாதேஸ்வரன், வெல்டிங் ராஜா, காசிநாதன், சுருளி, கனகராஜ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு(ATF) சார்பில்

# புரட்சியாளர் அம்பேத்கருக்கு மாலை அணிவித்து மரியாதை



கிருஷ்ணகிரி ஏப்ரல் 15.
புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் 135வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரி தாலுகா அலுவலக வலாகத்திலுள்ள, அவரது திருவுருவ சிலைக்கு அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு சார்பில், மாநில துணைப் பொதுச் செயலாளர் மு.குப்புசாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். பின்னர் அங்கு கூடி இருந்த அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் எஸ் கிருஷ்ணவேல், மாவட்ட செயலாளர் பிரகாசன், மாவட்ட பொருளாளர் டி.மணி, மாவட்ட அமைப்பு செயலாளர் எஸ். ஜோதிமணி, உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.



திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதிக்கான தபால் வாக்குகள் தொடர்பான பணிகள் திருவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், பார்வையிட்டார்

குமாரசாமிப்பேட்டை ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோவிலில்

# தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு கூழ் ஊற்றும் விழா




தருமபுரி ஏப்ரல் 15

தருமபுரி குமாரசாமிபேட்டையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் தமிழ் வருடபிறப்பைமுன்னிட்டுஅதிகாலையில்அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. அம்மன் சந்தன காப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதை தொடர்ந்து ஊர் பொதுமக்கள் சார்பில் கூல் ஊற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு கூழ் ஊற்றி அம்மனை வழிபட்டனர். இரவு மேளதாளங்கள் முழங்க அம்மன் திருவீதி உலா நடைபெற்றது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் செய்திருந்தனர்.



கோவை கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பி ஆர் ஜி அருண்குமார் பொதுமக்களிடம் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.மேலும் கவுண்டம்பாளையம் மேற்கு பகுதி செயலாளர் சின்னு (எ) சின்னசாமி தலைமையில் 16,16 A,35,35A,34,34A ஆகிய வார்டுகளில்,பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு கொடுக்கும் ஆரத்தி எடுத்தும் வரவேற்றனர். இதில் மாவட்ட நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள் வார்டு கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தினர்.

# சேரன் நகரில் திமுக கூட்டணி வேட்பாளர் நித்தியானந்தன் தீவிர வாக்கு சேகரிப்பு

## பொள்ளாச்சி மாரியம்மன் அருள் வாக்கு!!!



கோவை ஏப்:15

தமிழக சட்டமன்ற தேர்தல் 2026 நெருங்கி வரும் பரபரப்பான சூழலில் வேட்பாளர்கள் அனைவரும் சூறாவளி பிரச்சாரம் மற்றும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் பொள்ளாச்சி சேரன் நகரில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட வேட்பாளர் நித்தியானந்தன் அவர்களுக்கு பொதுமக்கள் சார்பில் வரவேற்பு அளித்தனர்.

முன்னதாககராத்தே ஆசிரியர்இப்ராஹிம்தலைமையில் மாணவர்களின் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் மாரியம்மன் வேடமிட்டு சிறுமி ஒருவர் நீ இந்த தேர்தலில் வெற்றி பெறுவாய் என அருள்வாக்கு வழங்கினார்.

வாக்கு சேகரிப்பு நிகழ்வில் கோவை தெற்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சேரன் நகர் சுரேஷ், அவர்கள் தலைமை வகித்தார் ஒன்றிய செயலாளர் மருதவேல், 26 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் எம்.கே. சாந்தலிங்கம் நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி போன்ற சார்பணிகள் பங்கேற்றனர்.

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்



கோவை ஏப் 15

கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் செந்தில் பாலாஜி ஆதரவாக முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர்,மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் எம் பி சிறப்புரையாற்ற, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்,கோவை ராஜவீதி,தேர் நிலைத்திடலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்,கழகத் தொண்டர்கள் மற்றும்பொதுமக்கள்பெரும்திரளாககலந்துகொண்டனர்.

கற்போம் கற்பிப்போம் சேவை மையம் சார்பில்

# தர்மபுரியில் டாக்டர் அம்பேத்கரின் 134 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்




தர்மபுரி ஏப் 15:

இந்திய அரசியலமைப்பின் தலைவர் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கரின் 134 வது பிறந்தநாள் விழா கர்ப்பம் கற்பிப்போம் சேவை மையம் சார்பில் தருமபுரி நியூ காலனியில் உள்ள தலைமை அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது அமைப்பின் தலைவர் பி சேகர் மற்றும் கௌரவத் தலைவர் ரங்கராஜ் அமைப்பின் பொதுச் செயலாளர் ராஜன் ஆகிய மூவரும் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். விழாவில் கலந்து கொண்ட அமைப்பின் நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. விழாவில் மூத்த நிர்வாகிகளான சஞ்சீவன், முருகன், பாரதி, மகேந்திரன், மேகநாதன், மற்றும் மகளிர் அணி துணைத்தலைவி திருமதி.வாணி, உட்பட ஏராளமான பொதுமக்களும் இந்த பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மேலும் இந்த விழா கூட்டத்தில் சட்ட மாமேதை அம்பேத்கரின் புகழ் மற்றும் அவரின் வாழ்க்கை நெறிமுறைகளை பாராட்டி அமைப்பின் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் பேசினார்கள். விழாவில் அமைப்பின் இளைஞர் அணி செயலாளர் எம்.மகேந்திரன், மாரண்டஹள்ளியை சேர்ந்த கல்லூரி மாணவி அருந்ததிக்கு உயர்கல்வி பயில உதவித்தொகையாக 10 ஆயிரம் வழங்கி ஊக்கப்படுத்தினார். விழா நிறைவில் தலைமை நிலைய செயலாளர் முருகன் அனைத்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு நன்றி பாராட்டினார்.

இளைஞர்கள் வேலை வாய்ப்புகள் பெற கோணம் தொழிற்பேட்டையில்

# புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் பாஜ வேட்பாளர் எம் ஆர் காந்தி பிரச்சாரம்



நாகர்கோவில், ஏப். 15

நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளர் எம் ஆர் காந்தி நேற்று தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு முன்னிட்டு வடிவீஸ்வரம் இடர்தீர்த்த பெருமாள் கோவிலில் இருந்து அவர் சாமி தரிசனம் செய்து பிரச்சாரத்தை தொடங்கினார். இதைத்தொடர்ந்து கோவில் வாசலில் சாமி தரிசனத்திற்காக வந்திருந்த பக்தர்களிடம் தாமரை சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். பின்னர் எம் ஆர் காந்தி பிரச்சாரத்தில் பேசியதாவது: நாகர்கோவில் தொகுதி மக்களின் வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபட எனக்குமீண்டும்ஒருவாய்ப்புதாருங்கள். நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளுக்கு தடையின்றி சுத்தமான குடிநீர் கிடைக்க உரிய நடவடிக்கை எடுப்பேன். பொதுமக்களின் போக்குவரத்து வசதியை கருத்தில் கொண்டு கோட்டார் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து நாகர்கோவில் டவுன் ரயில்வே வரை பயணிகள் எளிதாக செல்லும் வகையில் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்தி தரப்படும். நாகர்கோவிலில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இளைஞர்களின் வேலைவாய்ப்பு பெருக்கும்வகையில்எனதுமுயற்சியால் கொண்டுவரப்பட்ட ஐடி பார்க் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வருவேன். அதுமட்டுமின்றி கோணம் தொழிற்பேட்டையில் புதிய தொழிற்சாலைகளை தொடங்குவதற்கு தேவையான முயற்சிகளை எடுப்பேன். இதனால்இளைஞர்கள்வேலைவாய்ப்பு வசதி பெறுவார்கள்.

நாகர்கோவில்தொகுதியைதன்னிறைவு பெற்ற தொகுதியாக மாற்ற எனக்கு ஆதரவு தாருங்கள். தமிழகத்தில் தேசிய ஜனநாயக தலைமையிலான ஆட்சி அமையும். அப்போது உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்ற முழுமையாக உழைப்பேன். இவ்வாறு அவர் பேசினார். இந்த பிரச்சாரத்தின் போது நாகர்கோவில் மாநகராட்சி மாநகர உறுப்பினர் ஸ்ரீலிஜா மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கோவில்பட்டியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், உடன் அமைச்சர் கீதா ஜீவன் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரிய சாமி, கோவில்பட்டி நகரச் செயலாளரும் கோவில்பட்டி சட்டமன்ற வேட்பாளருமான கருணாநிதி, மாணிக்கராஜா, பிரியா குரு ராஜ், கட்சி முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# நவீன மக்கள் இயக்கம் சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நடனம்



கோவை ஏப்:15

கோவை வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 25 வது வார்டு காந்தி மாநகர் பகுதியில் நவீன மக்கள் இயக்கம் கலைக்குழுவில் இருந்து வருகிற சட்டமன்றத் தேர்தலை ஒட்டி வாக்கு செலுத்தும் அனைத்து பொதுமக்களும் சுயமாக சிந்தித்து இந்த கட்சியாக இருந்தாலும் சட்ட திட்டங்களை அறிந்து உங்களது வாக்கை செலுத்துமாறு நடன நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் மணியகாரம்பாளையம் பகுதி செயலாளர் அஞ்சுகம் எம் பழனியப்பன் ,25வது வார்டு மாமன்ற உறுப்பினர் தவமணி பழனியப்பன் மற்றும் 25 வார்டு வட்டக் கழக செயலாளர்கள் தாமோதரன்,சௌந்திரபாண்டியன் கழக தோழர்கள் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# திட்டங்களை தந்த ஸ்டாலினுக்கா! அடிமை இ.பி.எஸ்.,க்கா? சிந்தித்து ஓட்டளியுங்கள்'

## தி.மு.க., எம்.எல்.ஏ., மதியழகன்



கிருஷ்ணகிரி , ஏப்.15

திட்டங்களை தந்த தமிழக முதல்வர் ஸ்டாலின், மத்திய பா.ஜ.க., அரசுக்கு அடிமையாக உள்ள இ.பி.எஸ்., இவர்களில் யாருக்கு ஆதரவு என சிந்தித்து ஓட்டளியுங்கள் என மதியழகன் எம்.எல்.ஏ., பேசினார். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட வெப்பாலம்பட்டி, போச்சம்பள்ளி , புளியம்பட்டி பஞ்.,களுக்குட்பட்ட, 18 கிராமங்களில், தி.மு.க., வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பிரசாரம் மேற்கொண்டார். அப்போது, பொதுமக்களிடம் அவர் பேசியதாவது: தமிழகம் கடந்த, 5 ஆண்டுகளில், கல்வி, தொழில், சுகாதாரம், அடிப்படை கட்டமைப்பு என பல்வேறு துறைகளில் முதல் இடத்தை பிடித்து முன்னேறியுள்ளது. அத்தகைய சிறப்பான ஆட்சி தந்த முதல்வர் ஸ்டாலினின் திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்றன. தற்போது, திராவிட மாடல், 2.0 ஆட்சி வந்தவுடன் நிறைவேற்றும் திட்டங்களும் வாக்குறுதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் மறுபுறம், அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தி.மு.க., தலைவர்களை அவதூறாக, அநாகரிகமாக பேசி வருகிறார். ஜெயலலிதா, சசிகலா , டி.டிவி ., என கால்களை தேடி அலைந்தவர் தற்போதுதமிழகத்தை வஞ்சிக்கும் மோடி, அமித்ஷா காலில் விழுந்து கிடக்கிறார். அமலாக்கத்துறை , வருமான வரி த்துறை ரெய்டுகளில் இருந்து தப்பிக்க, பா.ஜ.க.,வின் அடிமையாகவே மாறி, அ.தி.மு.க.,வை அடகு வைத்துள்ளார். காலை உணவுத்திட்டம், தமிழ்புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன், மாணவர்களுக்கு லேப்டாப், அன்புகரங்கள், மக்களை தேடி மருத்துவம், மகளிர் விடியல் பயணம், உரிமைத்தொகை , மாநிலத்திலேயே அதிகமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 85,000 பேருக்கு பட்டா என திட்டங்களை வழங்கிய முதல்வர் ஸ்டாலினுக்கு நமது ஓட்டா, மத்திய பா.ஜ.க., அரசின் அடிமையாக உள்ள பா.ஜ.க., அரசுக்கு ஓட்டா, என மக்கள் சிந்தித்து பார்த்து ஓட்டளிக்க வேண்டும். வரும், சட்டசபை தேர்தலில், 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில், தி.மு.க., கூட்டணி வென்று சாதனை படைக்க வேண்டும். மீண்டும் தமிழக முதல்வராக ஸ்டாலினை அமர வைக்க அனைவரும் பாடுபட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

**FORMAT C-1**

**(forcandidatetopublishinNewspapers,TV)**

**DeclarationaboutCriminal Cases**

( As per the judgement dated 25th september, 2018, of Hon'ble Superme Court in WP(Civil) No. 536 of 2011( Publish Interest Foundation & Ors, Vs, Union of India & Anr)

NameandAddressofCandidate : B.Sheik bareeth, S/O.Babu,No:39,Asathstreet, asanath puram, DindigulWest,Dindigul- 624002.

NameofPoliticalParty : TamilagaValvurimaiKatchi

Name of Election : TAMILNADU LEGISLATIVE ASSEMBLYGENERALELECTION-2026

NameofConstituency : 132 DINDIGUL

IS.ALEX(Nameofcandidate),acandidatefortheabovementionedelection,declareforpublic information the following details about my criminal antecedents.

(A)PendingCriminalCases

| S.No | Name of court | Case No. And Dated | Statusof case (S) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | Nil | Crimeno: 0060/2022 | REFERRED | IPC143,341(TOWNSOUTHPS DINDIGUL) |
| 2 | Nil | Crimeno: 0623/2018 | REFERRED | CRPC151,(TOWNNORTHPS DINDIGUL) |
| 3 | Nil | Crimeno: 0160/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 4 | Nil | Crimeno: 0145/2022 | REFERRED | CRPC151, (TOWNSOUTHPSDINDIGUL) |
| 5 | Nil | Crimeno: 0130/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 6 | Nil | Crimeno: 0401/2024 | PENDINGTRIAL | IPC294(B),324,506(2),(TOWN NORTHPSDINDIGUL) |

**(B)Detailsaboutcasesofconvictionforcriminaloffences**

| S.No | NameofCourt& date(s)oforders(s) | Descriptionofoffence(s)& Punishmentimposed | Maximum Punishmentimposed |
|---|---|---|---|
| 1 | Nil | Nil | Nil |
| 2 | Nil | Nil | Nil |
| 3 | Nil | Nil | Nil |

*In the case of election to councilof states or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency.

Note:

(i) TheParticularsregardingcriminalcasespendingagainstthecandidateshallbein bold letters.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.